# சிறுதொண்டர் நாயனார் புராணத்தில் விருந்தோம்பலின் மகத்துவம்: ஓர் ஆய்வு

**மிதுனா குலவீரசிங்கம்[1] , பேபிசாலினி இராமக்கவுண்டர்[2]**

[1]இந்து நாகரிக சிறப்புக்கற்றை மாணவி,
[2]உதவி விரிவுரையாளர் (இந்து நாகரிகம்)
மொழித்துறை
இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

*mithunasingam@gmail.com1*
*babysaliniramakkavundar@gmail.com2*

**ஆய்வுச்சுருக்கம்:** *இறைவனால் அடியெடுத்துக் கொடுக்கப்பட்டு இயற்றப்பட்ட நூலாகவே திருத்தொண்டர் புராணத்தினைக் குறிப்பிடலாம். இப்புராணம் தோன்றுவதற்கு மூலமாக விளங்குவது சுந்தரர் பாடிய திருத்தொண்டர் தொகையும், நம்பியாண்டார் நம்பி பாடியத் திருத்தொண்டர் திருவந்தாதியுமே ஆகும். இத்தகு சிறப்பு வாங்ந்த பெரிய புராணத்தில் எல்லாச் செல்வமும் இருந்தும் கொள்கையில் உறுதியாக இருத்தல் என்பது அனைவருக்கும் உரிய செயல். ஆனால் எதுவும் இல்லாத காலத்திலும் கொள்கையில் உறதியாக இருந்து தன்னுடைய பக்தி திறத்தினை வெளிப்படுத்தியவர்கள் நாயன்மார்கள், அத்தகு சிறப்புடைய நாயன்மார்களுள் ஒருவராக சிறுத்தொண்டர் நாயனாரும் திகழ்கின்றார். இவரைப்பற்றி எடுத்துரைப்பதே சிறுத்தொண்டர் நாயனார் புராணம் ஆகும். இப்புராணத்தில் விருந்தோம்பலின் மகத்துவமானது உன்னதமாக எடுத்துரைக்கப்படுகின்றது. இந்தவகையில் தமிழரின் பண்பாட்டில் விருந்தோம்பல் தனியிடம் பெறுகின்றது. இந்துக்களின் தலைசிறந்த பண்பாடுகளில் விருந்தோம்வலும் ஒன்றாகும். இந்துக்களின் வர்ணாச்சிரம தர்ம நெறியிலே கிருகஸ்த நிலையிருப்போரின் மிக முக்கிய கடமையாக விருந்தோம்பல் சுட்டப்படுகின்றது. இல்லற நிலையிலே பெண்கள் தமது இல்லத்துக்கு வருவோரை இன்முகத்துடன் வரவேற்று இனிய அமுதினைப் படைத்ததை இந்து மூலங்கள் வாயிலாக அறிந்து கொள்ள முடியும். இல்லறக் கடமைகளில் ஒன்றான திருமணம் நடைபெறும் நோக்கமே விருந்தோம்பல் ஆகும். விருந்தோம்பும் பண்பு உடையவர்கள் வறுமையில் வாடினாலும் அவர்கள் வாழ்வில் மேன்மையுடையவர்கள். ஊடல் தணிக்கும் வாயில்களுள் ஒன்று விருந்தினர் வருகையாக விளங்குகின்றது. நம்மை நாடிவரும் விருந்தினரை இன்முகத்தோடு வரவேற்று உணவு முதலியவற்றை வழங்கி மிக்க அன்போடும் ஆர்வத்தோடும் அவர்களை உபசரிப்பது வாழ்க்கையில் தலைசிறந்த பண்பாகக் கருதப்படுகின்றது. அந்தவகையில் புராணங்கள் பொதுவாக இறைவனது புகழைப் போற்றுவனவாக அமைந்தன. ஆனால் சிறுதொண்டர் நாயனார் புராணத்தில் இறைவனைது மேன்மைகளைப் போற்றுவதனை விடவும் விருந்தோம்பலுக்கே அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளயே ஆய்வின் பிரச்சினையாக அமைகின்றது. மேலும் சிறுதொண்டர் நாயனார் புராணத்தில் வெளிப்படும் விருந்தோம்பல் பற்றிய சிந்தனைகளை அடையாளம் காணல் ஆய்வின் பிரதான நோக்கமாக அமைகின்றது. அத்துடன் விருந்தோம்பல் முக்கியத்துவத்தை வலியுறுத்தல், இல்லறத்தில் விருந்தோம்பலின் பற்றிய எடுத்துரைத்தல், தற்கால வாழ்க்கையின் விருந்தோம்பல் பெற்றுள்ள சிறப்பினை புலப்படுத்தல். முதலியன ஆய்வின் துணை நோக்கங்களாக அமைகின்றன. பெரிய புராணத்தில் அறுபத்து மூன்று நாயன்மார்களது வரலாறு பற்றி கூறப்படுகின்றது. அவற்றுள் சிறுதொண்ட நாயனார் புராணமானது ஆய்வின் எல்லையாகக் கொள்ளப்பட்டுள்ளது. சிறுதொண்டர் நாயனார் புராணத்தில் விருந்தோம்பல் பற்றிய சிந்தனைகளே அதிகளவில் வலியுறுத்தப்பட்டுள்ளன எனும் கருதுகோளை முன்வைத்து இவ்வாய்வானது நிகழ்த்தப்பட்டுள்ளது. அத்துடன் பெரியபுராணம் குறித்து பல்வேறு ஆய்வுகள் மேற்கொண்ட போதிலும சிறுதொண்டர் நாயனார் புராணத்தில் விருந்தோம்பல் குறித்து தனியான ஆய்வு எலவில்லை என இவ்வாய்வு இடைவெளியை பூர்த்தி செய்யும் வகையில் இவ்வாய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் முதலாம் நிலைத்தரவுகளையும் இரண்டாம் நிலைத்தரவுகளையும் பயன்படுத்தி ஆய்விற்காக தரவுகள் பெற்றுக்கொள்ளப்பட்டன. மேல் உலகம் அடைவதற்கான சிறந்த வழி விருந்தோம்பல் ஆகும். என்று திருவள்ளுவர் கூறுகின்றார். ஒவ்வொருவரும் விருந்தினரை உபசரித்து பிறப்பின் அர்த்தத்தையும் வரும் தலைமுறைக்கு விருந்தோம்பும் பண்பின் திறத்தை உணர்த்தி வாழ்தல் இன்றியமையாத ஒன்றாகும். அந்தவகையில் சிறுதொண்டர் புராணம் எடுத்துரைக்கும் விருந்தோம்பல் பற்றிய சிந்தனைகளை இவ்வாய்வானது ஆராய்கின்றது.*

**திறவுச்சொற்கள்:** சிறுதொண்டர் புராணம், விருந்தோம்பல், இல்லறம், நாயனார், உணவு

## 1. ஆய்வு அறிமுகம்

பண்டைக்கால சமுதாயப் பழக்கவழக்கங்களிலே விருந்தொம்பல் மிகவுயர்ந்த அறமாகத் திகழ்ந்தது. மனித வாழ்வின் அத்தியாவசியத் தேவைகள் உணவு, உடை, உறையுள் என்பனவாகும். இவற்றிலே உணவு முதன்மையானது. இவ்வுலகில் மிகக் கொடுமையான விடயமாக பசி காணப்படுகின்றது. அதனைக் கலைவதற்கே விருந்தோம்பல் அறம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. விருந்தோம்பல் என்பதற்கு கழகத் தமிழகராதி " புதிதாய் வருபவரை உண்டி முதலியவற்றை உபசரிக்கை நடத்துவது"[1] எனச்சுட்டுகிறது.

இந்துக்களின் தலைசிறந்த பண்பாடுகளில் விருந்தோம்வலும் ஒன்றாகும். இந்துக்களின் வர்ணாச்சிரம தர்ம நெறியிலே கிருகஸ்த நிலையிருப்போரின் மிக முக்கிய கடமையாக விருந்தோம்பல் சுட்டப்படுகின்றது. இல்லற நிலையிலே பெண்கள் தமது இல்லத்துக்கு வருவோரை இன்முகத்துடன் வரவேற்று இனிய அமுதினைப் படைத்ததை இந்து மூலங்கள் வாயிலாக அறிந்து கொள்ள முடியும். "இலன் என்னும் எவ்வம் உரையாமை ஈதல் குலனுடையான் கண்ணே உள"[2] என்பதற்கேற்ப இல்லையென இரந்து வந்தவருக்கு இல்லை என்னாமல் இயன்றதைத் தருவதே ஈகை எனும் கொடையாகும். மனிதர்களுக்குரிய இச்சிறப்பான பண்பினை தொன்று தொட்டு இன்று வரை காணக்கூடியதாக உள்ளது. காலம், நேரம் கருதாது ஒருவரது உள்ளக்கிடக்கையை குறிப்பாலுணர்ந்து

சிவபெருமானிடம் மிகுந்த பக்தியும் அன்பும் கொண்ட அடியாராகிய சிறுத்தொண்ட நாயனார் சோழநாட்டில் காவிரியால் வளம் கொழிக்கும் திருச் செங்காட்டங்குடி எனும் ஊரில் நாகபட்டின மாவட்டம் அமைந்துள்ளது. அந்நகரினிலே மாமாத்திரர் மரபினில் பரஞ்சோதியார் எனும் இயற்பெயர் கொண்டு பிறந்தவரே இந்நாயனாராவார். இவரது வரலாற்றினைக் கூறுவதாக சிறுதொண்டர் புராணம் அமைகின்றது. இப்புராணத்தில் விருந்தோம்பல் பற்றிய சிந்தனைகள் மிகையாகக் கூறப்படுகின்றன. அதனடிப்படையில் பழந்தமிழர்கள் தங்கள் இல்லத்தை கூட விருந்தோம்பலுக்கு ஏற்பத் திட்டமிட்டு உருவாக்கினர். இல்லறப் பெண்கள் இரவில் கதவைத் தாழிடும்பொழுது யாராவது இருந்தால் உணவுண்ண வாருங்கள் எனக்கேட்டுத் தெளிவடைந்த பின்னரே தாழிடுவது வழக்கம். இதனை "விருந்தினர் வருவீர் உளிரோ" என்னும் சங்கப்பாடல் விளக்கும். வீட்டிற்கு வரும் விருந்தினரை வாருங்கள் என்று இன்முகத்தோடு அழைத்து உபசரிக்க வேண்டும்.

"இந்துக்கள் போதும் என்ற மனத்திருப்தியுடன் மேலதிகமான பொருளை இறைவனுக்காக என அர்ப்பணித்து விருந்தோம்பலை மேற்கொள்ள வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. இதனையே மக்கள் சேவையே மகேசன் சேவை எனச் சிறப்பிக்கப்படுகின்றது".[3]
மேல் உலகம் அடைவதற்கான சிறந்த வழி விருந்தோம்பல் ஆகும். என்று திருவள்ளுவர் கூறுகின்றார். ஒவ்வொருவரும் விருந்தினரை உபசரித்து பிறப்பின் அர்த்தத்தையும் வரும் தலைமுறைக்கு விருந்தோம்பும் பண்பின் திறத்தை உணர்த்தி வாழ்தல் இன்றியமையாத ஒன்றாகும். இத்தகைய விருந்தோம்பல் பண்பானது சிறுதொண்டர் நாயனார் புராணத்தில் எங்ஙனம் எடுத்துரைக்கப்படுகின்றது என்பதனை இவ்வாய்வானது ஆராய்கின்றது.

## 2. ஆய்வு முறையியல்

இவ்வாய்வானது விபரண ஆய்வாகவும் ஒப்பீட்டு ஆய்வாகவும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அந்த வகையில் சிறுதொண்டர் நாயனார் புராணத்தில் காணப்படுகின்ற விருந்தோம்பல் பற்றிய கருத்தியல்களை விபரித்துக் கூறுவதால் விபரண ஆய்வு பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலும் சிறுதொண்டர் நாயனார் புராணத்தில் விருந்தோம்பல் பண்பிணையும் ஒப்பிட்டு ஆராய்வதனால் இவ்வாய்வானது ஒப்பிட்டு ரீதியில் மேற்கொள்ளப்படுகின்றன.

### 2.1 ஆய்வு மூலங்கள்

இவ்வாய்வுக்காக முதலாம் நிலைத் தரவுகளும் இரண்டாம் நிலைத் தரவுகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

அ. முதலாம் நிலைத் தரவுகளாக சிறுதொண்ட நாயனார் புராணத்தின் மூலநூல் பணன்படுத்தப்பட்டுள்ளது.

*ISBN: 978-955-627-013-6*

ஆ. இரண்டாம் நிலைத்தரவுகளாக விருந்தோம்பல் பற்றிய சிந்தனைகளை உள்ளடக்கிய நூல்கள், சஞ்சிகைகள், ஆய்வுக்கட்டுரைகள், இணையத்தளச் செய்திகள் போன்றன பயன்படுத்தப்பட்டுள்ளன.

## 2.2 இலக்கிய மீளாய்வு

சுப்பிரமணிய முதலியார், சி.கே, (2018), திருத்தொண்டர் புராணம், என்ற நூலில் பெரிய புராணம் பற்றிய விளக்கத்தை அறிந்து கொள்ளமுடிந்தது.

நடராசன், பி.ரா, (2006), பெரிய பராணம், எனும் நூலிலிருந்து சிறுதொண்ட நாயனார் புராணத்தை அறிந்து கொள்ளமுடிந்தது.

சுப்பிரமணிய முதலியார், சி.கே, (1953), சிறுத்தொண்ட நாயனார் புராணம், என்ற நூலில் சிறுத்தொண்ட நாயனார் பற்றிய வரலாற்றை முழுமையாக அறிந்து கொள்ளமுடிந்தது.

ஞான சம்பந்தன், அ.ச, அறுபத்துமூன்று நாயன்மார் கதைகள், எனும் நூலிலிருந்து சிறுத்தொண்ட நாயனார் பிறப்பு, தொழில், வாழ்வு, விருந்தோம்பல் பண்பு போன்றவற்றை அறிந்து கொள்ளமுடிகின்றது.

தியாகராஜன், மு, (2019), ஆய்வு : திருத்தொண்டர் புராணத்தில் விருந்தோம்பல் பண்பாடு, இவ்வாய்விலிருந்து பெரிய புராணம் பற்றிய விளக்கத்தையும் விருந்தோம்பல் பற்றிய விளக்கத்தையும் அறிந்து கொள்ளமுடிந்தது

சுபராஜ், ந,. ரதிதேவி, சே, (2019), ஆய்வு : இஸ்ஸாமியரின் ஸகாத் நடைமுறையும் இந்துக்களின் விருந்தோம்பற் கோட்பாடும், இவ்வாய்விலிருந்து விருந்தோம்பல் பற்றிய கருத்துக்களையும் அதன் முக்கியத்துவத்தையும் அறிந்து கொள்ளக்கூடியதாக இருந்தது.

ஐந்தமிழ் ஆய்வு : (2017) சான்லாக்ஸ் பன்னாட்டு தமிழியல் ஆய்விதழ், எனும் ஆய்விலிருந்து விருந்தோம்பலின் சிறப்புக்களை அறியமுடிகின்றது.

விஜயராகவன், க, (2017), இதழ் : பழந்தமிழரின் விருந்தோம்பும் திறன், விருந்தோம்பலின் சிறப்பையும் மென்மையையும் அறிந்து கொள்ளமுடிகின்றது.

## 3. கலந்துரையாடலும் பெறுபேறுகளும்

விருந்தினரைக் கைவொழியாது போற்றிய செய்தி “விருந்தோடு கைதூவா…”[4]

என்று கலித்தொகையில் காணப்படுகின்றது. விருந்தின் மூலம் தலைவன் தலைவியிடையே ஏற்படும் ஊடலும் தீர்வதைக் காணமுடிகின்றது. விருந்தோம்பல் செய்வது ஆறறிவு படைத்த உயிர்களுக்கு மட்டுமன்று. தனக்கு உதவி செய்தவரை மறக்காது, நன்றி மறவா உள்ளத்தோடு விருந்து படைப்பது தமிழர் வழக்கம். விருந்து எனும் சொல்லுக்கு புதுமை என்று பொருள். இல்லம் தேடிப் புதிதாக வருபவரை இன்முகத்தடன் வரவேற்று இனிய மொழிகள் பேசி, உபசரித்துப் போற்றும் உயரிய பண்புகளில் ஒன்றாக விருந்து புறந்தருதலைத் தொல்காப்பியர் குறித்துள்ளார். தலைவியின்றி விருந்தோம்பல் நிகழாது இல்லற மகளிரது தலையாய கடமையாக விருந்தோம்பல் காணப்படுகின்றது.

மாறிவரும் சமூக பொருளாதார மாற்றங்களுக்கு ஏற்பத் தமிழர் பண்பாட்டுக் கூறுகள் மாறிவருகின்றனர். முன்பெல்லாம் வழிபோக்கர்களும் தங்கி ஓய்வெடுக்குமாறு வீட்டின் முன்பக்கத்தில் தாழ்வாரத்தில் திண்ணைகள் அமைக்கப்பட்டன. இன்று அவை இரும்பு கம்பிகளால் அடைக்கப்பட்டு வெளியில் நாய்கள் ஜாக்கிரதை என்ற எச்சரிக்கையுடன் காணப்படுகின்றனர். இதனால் உறவினர்கள் கூட வந்து செல்வதற்கு அஞ்சுகின்றனர். தற்போது விருந்தினர்கள் வருகிறார்கள் என்றார் முந்தைய நாளே தெரிவிக்க வேண்டும் என்ற கட்டாயம் ஏற்பட்டுவிட்டது. முன்பெல்லாம் பெரிய பானையில் உணவு சமைத்தக் காலம் போய்விட்டது. இப்போது அளவெடுத்துச் சமைப்பதும் சமைத்த மீதி உணவைப் பாதுகாத்துப் பெட்டகத்தில் வைத்து பாதுகாப்பதும் வழக்கமாகிவிட்டன. இன்னும் சிலர் தொலைகாட்சிப்பெட்டியின் முன் அமர்ந்தால் வரும் விருந்தினர்களை வரவேற்கக் கூட மறந்து விடுவார்கள்.

சிவனின் திருவடியார்களை நாள்தோறும் சாஸ்திர விதிப்படி திருவமுது ஊட்டி பின்னர் தாம் உண்ணுவதால் மனநிறைவடைகின்ற அடியாராக சிறுதொண்ட நாயனார் விளங்கினார். திருவடியார்களுக்கு உணவு வழங்குவதை தன் வாழ்வின் ஒழுக்கமாக கொண்டு அந்த தூய பணியை தன் தலையாய கடமையாக செய்து வந்தார். பின் தூங்கி முன் எழும் என்னும் தொடர் போல் நாயனார் முன் ஊட்டி பின் உண்ணும் பண்பிணை கொண்டுள்ளார். தன்னிடம் இருப்பவை எல்லாவற்றையும் அடியார் தாம் பெற்ற மக்களுக்கு தாய் போல் பேணி பின் தன்னிடம் எஞ்சி இருப்பதையே தனக்காக பயன்படுத்துவார். இதனை,

"நறை இதழிற் திருமுடியார் அடியாரை நாள்தோறும்

முறைமையினில் திரு அமுதுமுன் ஊட்டிப் பின் உண்ணும்..."[5]

இத்தகைய பணியினை செய்து வந்த நாயனார் சிவனடியாருக்கு மிகவும் சிறப்பான வகையில் விருந்தோம்பலினை மேற்கொண்டார். அதாவது தூய்மையான திருவமுது, கனிவகை, சர்க்கரை, அறுசுவைகளைக் கொண்ட கறிவகைகள், நெய், பிறையிட்டுக் கட்டியாகிய தயிர், பால், இனிய பலகாரங்கள் போன்றவற்றினை வந்திருப்பவர்களுக்கு படைத்து மகிழ்வுடன் உபசரிப்பார். சிவனது அடியார்களிடம் அவர் கொண்டிருந்த விருப்பினால் அவர்களை மேன்மையாகவும் அவ்வடியார்கள் மன் தம்மை மிகச் சிறியவராகவும் எண்ணி அவர்களுக்குப் பணிந்து நடந்தமையினால் அவரை உலகத்தினர் சிறுதொண்டர் என்று போற்றினர். இப் பெயரின் காரணத்தினை நோக்கும்போது அவர் சிவனடியாரின் மீது கொண்டிருந்த பற்று தெளிவாக காட்டப்படுகின்றது. சிவனது அடியாருக்கு அளவற்றி நிதிகளைக் கொடுத்து உதவினார். ஏன்பதும் குறிப்பிடத்தக்கது. ஏனெனில் விருந்தோம்பலில் ஈகை என்பதும் ஒரு பகுதியாக காணப்படுகின்றமை சிறப்பாகும்.

இவரது விருந்தோம்பல் பண்பினை உலகிற்கு எடுத்துக்காட்டுவதற்காக முழுமுதற் கடவுளே அடியாரினது வேடம் கொண்டு தணிக்க முடியாத பெரும் பசியுடன் வருபவரைப்போல கண்ணில் தென்படுவோர்கள் அனைவரிடமும் சிறுதொண்டர் வீட்டினைக் கேட்டறிந்து தொண்டர்களுக்கு எந்நாளும் சோறு அளிக்கும் சிறுத்தொண்டரின் இம் மனையில் உள்ளாரோ என்று வந்து சேர்ந்தவர் சிவனின் அடியார் என்பதை அறிந்து கொண்ட சந்தனத் தாதியார் என்ற அம்மையார் அடியாரிடம் வந்து இறைவனது அடியார்களை தேடும் பொருட்டு நாயனார் வெளியில் சென்றுள்ளார் எனவே வீட்டின் உள்ளே வந்து அமருமாறு வேண்ட அந்த அடியார் பெண்கள் தனித்து இருக்கும் இடத்தில் யாம் தனியே செல்ல மாட்டன் எனக் கூறினார். இதனைக் கேட்ட அம்மையார் நாயனாரின் மனைவியை அடியாரிடன் அழைத்து வந்தார். அடியாரை வணங்கிய நாயனாரின் மனைவி இறையடியார்களுக்கு திருவமுது செய்யும் பணியினை தலையாய மேற்கொண்டார். அவர் அப்பணியை இனிதே நிறைவேற்றுவதற்கு வீட்டிற்கு அடியார் யாரும் வராத காரணத்தினால் அவர்களை அழைத்து வருவதற்காகச் சென்றுள்ளார். தற்போது தீடீரென நீங்கள் வந்திருப்பதனைப் பார்த்தால் இறைவனின் திருவேடமாகவே தாங்கள் வந்துள்ளீர்கள் போல காணப்படுகின்றீர்கள். எனக்கூறுவதனூடாக விருந்தினர்களை தெய்வாமாகப் போற்றுகின்ற பண்பானது புலப்படுத்தப்படுகின்றது. இதனை பின்வரும் பாடல் வரிகள் புலப்படுத்தப் படுகின்றது.

"...எம்பெருமான் யாவரையும் கண்டிலர் தேடிப்போனார்
வம்பு என நீர் எழுந்தருளி வரும் திருவேடம் கண்டால்..."[6]

சிவனடியார்களின் முன் நான் சென்று வணங்கிடும் தகுதியற்றவன் ஆயினும் சிவனடியார்களின் கருணையினால் குற்றமற்ற செயல்களைச் செய்கின்ற அடியார்களுக்கு திருவமுது செய்விக்கின்ற பணியினைச் செய்வதற்காக அனைத்து இடங்களிலும் சென்று தேடினேன் ஆனால் யாரையும் காணலாம். இறைவனது அருளினால் எங்கு தேடியும் கிடைக்காத அடியார் தாங்கள் நீங்களாகவே என்னைத் தேடி வந்துள்ளீர்கள் எனக்கூறினார்.

மேலும் தனது வீட்டில் அமர்ந்து விருந்தினை உண்ணுமாறு வேண்டினார். அதற்கு அடியார், தான் விரும்பும் வகையில் விருந்தினை சமைக்க முடியாது எனக் கூறினார். அதற்கு நாயனார் தாங்கள் எத்தகைய வகையில் விருந்தானது வேண்டும் எனக்கூறினாலும் நாங்கள் தமக்கு அளிப்போம் எனக்கூறியதைக் கேட்ட அடியார் பரிவுமிகு தொண்டரே நாம் மூன்று நாட்களுக்கு

விரதம் இருந்து கழித்தபின் பசுவினைக் கொன்று அமுது இட்டால் உண்போம். அவ்வாறு உண்பதற்குரிய நாள் இன்றைய நாளாகும். ஆனால் உமக்கு என் விரதத்திற்குத் தகுந்தால் போல் உணவு வழங்குவது கடினமாக இருக்கும் என்கிறார். இவ்வாறு வந்த அடியாரது வார்த்தைகளைக் கேட்ட நாயனார், அடியாரை நோக்கி இறைவனது திருவருளால் நான் மூன்று வகையான நிரைகளையுடையவன் எனக்கு இங்குக் குறையில்லை. எனவே தங்களது விருப்பத்திற்கிணங்க காலம் தாழ்த்தாது விருந்தினை தயார் செய்து படைப்பேன் எனக் கூறினார். இச்சம்பவத்தின் ஊடாக விருந்தினர் எத்தகைய உணவினை விரும்பினாலும் விருந்தினை வழங்குவோர் மிக்க மனமகிழ்வுடன் வரவேற்று அவர்களுக்கு உணவினை வழங்குவது சிறப்பாகும் என்பது புலப்படுத்தப்படுகின்றது.

“பண்பு மிக்க சிறுத்தொண்டர் பரிவுகண்டு பயிரவரும்
நண்புமிக்கீர் நாம் உண்ணப் படுக்கும் பசுவும் நரப்பசுவாம்…”[7]

பண்பீர் நாம் உண்ணப் பயன்படுத்துவது பசுமானிடப் பசுவாம். ஐந்து வயதுக்குள்ள நரப்பசுவே யாம் உண்பது நோய் செய்யும் புண்ணில் வேலினைப் பாய்ச்சுவது போல் சொல்ல ஒன்று உண்டு.

“உண்பது ஐந்து பிராயத்துள் உறுப்பில்மறு இன்றேல் இன்னம்
புண்செய் நோவில் வேல்எறிந்தால்போலும் புகல்வது ஒன்று என்றார்”[8]

ஒரு குடிக்கு ஒரு சிறுவனாய் அவனை அவன் பயந்த தந்தையும் தாயுமாய் பிடித்து அந்நிலையில் மனம் மாறாத மகிழ்ச்சி நிலையில் குற்றமின்றி அமைத்திட்ட கறி உணவினையே யாம் உண்போம் என அடியார் கூற எம்பெருமானாகிய நீங்கள் திருவமுது செய்யப்பெற்றால் அடியவனுக்கு இச்செயல் அரியதென்று கூறி விடைபெற்று விரைந்து பெருமகிழ்ச்சியோடு தம் இல்லம் வந்தார்.

“யாதும் அரியது இல்லை இனி ஈண்ட அருளிச் செய்யும் என
நூதன் தானும் ஓர் குடிக்கு நல்ல சிறுவன் ஒரு மகனைத்…”[9]

இல்லத்துக்கு வந்த நாயனார் தன் மனைவியை நோக்கி ஒரு குடிக்கு ஒரு மகனாகவும் ஐந்து வயது உள்ளவனாய் எவ்வித உறுப்பும் குறையாமலும் பிள்ளையை தாயானவள் பிடிக்க மகிழ்வோடு தந்தை அரிந்து அமுது சமைக்கப் பெற்றால் உள்ளம் மகிழும் படி திருவமுது செய்ய கூறியதாக கூறினார்.

“கொள்ளும் பிராயம் ஐந்து உள்ளால் உறுப்பில் குறைபாடு இன்றித்தாய்
பிள்ளைபிடிக்க உவந்து பிதா அரிந்து சமைக்கப்பெறின் என்றார்” [10]

இவ்வுலகில் தாம் பெற்ற மைந்தனை தாயரும் தந்தையரும் மனமகிழ்ச்சிவோடு அரிவார் யாரும் இல்லை என அறிந்த நாயனார். தன் மனைவியை நோக்கி அடியாருக்கு அமுதளிக்க நாம் பெற்ற மகனை அழைப்பதாக கூறியதைக் கேட்ட அவரது மனைவி தாமும் உடன்படுவதாகவும் அடியாருக்கு உணவளிப்பதற்காக உடனே தமது மகனை பள்ளியில் இருந்து அழைத்து வரும் படி கூறினார்.

“நினைவு நிரம்ப நிதிகொடுத்தால் தருவார் உளரே நேர்நின்று
தனையன் தன்னை தந்தையாய் அரிவார் இல்லைத் தாழாமே...”[11]

மனைவி கூறியதைக் கேட்டதும் நாயனாரும் குற்றம் நீங்க அனைத்துப் பேறும் ஒருசேர ஒன்றாய் பெற்றதைப் போல மிக மகிழ்ந்து அடியாருக்கு விருந்தளிக்க மழலை மொழி பேசும் தமது புதல்வரை அழைக்க விரைவாகச் சென்றார்.

“…நாதர் தமக்கு அங்கு அமுதாக்க நறுமென் குதலை மொழிப் புதல்வன்
ஓத அணைந்த பள்ளியினில் உடன்கொண்டு எய்தக் கடிது சென்றார்…”[12]

பள்ளியைச் சென்றவுடன் பாதங்களின் மேல் அணிந்திருந்த சதங்கை மணிகள் ஒலிக்க பிள்ளை அவர் எதிர் ஓடிவந்து தழுவிக் கொள்ள தழுவிக் கொண்ட பிள்ளையை தோளின் மேல் வைத்துப் அணைத்து வீட்டிற்கு அழைத்து வந்து மனைவியிடம் ஒப்படைத்தார்.

"பள்ளியில் சென்று எய்துதலும் பாதர் சதங்கை மணி ஒலிப்ப பாதர்
பிள்ளை ஓடிவந்து எதிரே தழுவ எடுத்துப் பியலின்மேல்..." [13]

இல்லத்திற்கு வந்த குழந்தையின் தலைமுடியினைத் திருத்தி முகத்தை நன்கு துடைத்து கடுக்கனிலும் அரைஞாணிலும் படிந்த தூசுகளை நீக்கியும் கண்ணில் இட்டுள்ள மையினை ஒதுக்கிய பின் நீராட்டி கணவரான நாயனாரிடம் கொடுத்தார். பிள்ளை தற்போது அமுதுக்காக உதவும் பண்டம் என்ற வகையினால் தனது அரிய புதல்வனை மார்புடன் அணைக்காது உச்சிமோவாது, முத்தமிடாது அடியாருக்காக தயாரிக்கப்படும் உணவினை தமது சமையலறையில் சமைக்காது தனி இடம் கொண்டு சென்று தூய்மையான முறையில் சமைப்பதற்கு ஆயத்தம் செய்தனர். அடியாருக்கு திருவமுதாக படைக்க இருக்கும் உணவினை தான் விரும்பக்கூடாது என்பதற்காகவும் அவ்வுணவானது எச்சில் படாமல் இருக்கவேண்டும் என்பதற்காகவும் பெறறோர்கள் தமது புதல்வனை முத்தமிடாமலும் அணைக்காமலும் இருந்தார்கள். இதனை பின்வரும் பாடல் பறைகின்றது.

" ...உச்சி மோவார் மார்பின் கண் அணைத்தே முத்தம் தாம் உண்ணார்
பொச்சம் இல்லா திருத்தொண்டர் புனிதர் தமக்கு கறி அமைக்க
மெச்சும் மணத்தால் அடுக்களையின் மேவார் வேறு கொண்டு அணைவார்..."[14]

இப்பாடலில் இருந்து வீட்டிற்கு வருகை தரும் விருந்தினருக்கு தூய்மையான முறையில் உணவினை சமைத்து பரிமாற வேண்டும் என்ற உயரிய பண்பானது வெளிப்படுத்தப்படுகின்றது. அத்துடன் ஒருமித்த மனமுடைய பெற்றோர்கள் இருவரும் தாம் செய்யவிருக்கும் காரியத்தின் உன்னதமான உண்மைத்தன்மையினை அறியமாட்டார்கள் என்று எண்ணி மறைவான இடத்தினுள் சென்று பிள்ளையை பெற்ற நாயனாரின் மனைவி செழிப்பான உணவினை அமைப்பதற்கு உரிய பாத்திரத்தை கழுவி ஆயத்தம் செய்த பின் கால்கள் இரண்டையும் மடியின் இடையே இடுக்கிக் கொண்டு மகனின் கைகள் இரண்டிணையும் பிடித்துக் கொள்ள மகனும் அவனது பெற்றோர்களும் பெரு மகிழ்ச்சி கொள்கின்றனர். இதனை பின் வரி பாடல் புலப்படுத்துகின்றது.

"இனிய மழலைக் கிண்கிண்கால் இரண்டும் மடியின் புடைஇடுக்கிக்
கனிவாய் மைந்தன் கைஇரண்டும் கையால் பிடிக்கக் காதலனும்
நனிநீடு உவகை உறுகின்றார் என்று மகிழ்ந்து நகைசெய்யத்
தனி மாமகனைத் தாதையார் கருவி கொடுதலை அரிவார்..."[15]

இப்பாடலின் ஊடாக நாயனாரினதும் அவரது மனைவியாரதும் இறைவனது அடியார் மீது கொண்டுள்ள அன்பு நெறி புலப்படுத்தப்படுகின்றது. அதாவது தாம் ஈன்ற புதல்வனை தாமே கொள்கின்ற நிலை ஏற்பட்ட போதிலும் அதனை இறையடியாருக்கு செய்யும் தொண்டாவே கருதி மன மகிழ்வுடன் செய்கின்ற பண்பு வெளிகாட்டப்படுகின்றது. இப்பாடலில் நாயனாரும் அவரது மனைவியும் கொலையே செய்த போதிலும் அது கொலையாக கருதப்படாது ஏனெனின் அது அடியவருக்கு அருளின் வழி செய்யப்படும் ஞான சாதனச்செயலாகவே கருதப்படும்.

ஒப்பற்ற தன் புத்திரன் தமது விருந்தோம்பல் பண்பிணை அறிந்து இல்லம் நாடி வந்த சிவனடியாருக்கு அவர் விரும்பிய வகையில் உணவினை பரிமாறுவதற்கு தனக்கு உதவியமையை எண்ணி பெறுமகிழ்ச்சி அடைகின்றார். அது போன்று தமது வாழ்வின் கடமையாக ஆற்றி வருகின்ற விருந்தோம்பல் பண்பானது தடைப்பட்டு இருப்பின் தனது கணவனால் உயிர் துறந்து இருப்பார் அத்துடன் அடியவரின் விருப்பத்திற்கு இனங்க உணவினை இவர்கள் அளிக்கவில்லை என்ற அவப்பெயரும் ஏற்பட்டிருக்கும். இத்தகைய இக்கட்டான சூழலில் தமது புதல்வன் பெரும் உதவி புரிந்து தன் கணவரின் உயிரையும் தன் குடும்பத்தின் நற்பெயரையும் காக்கின்ற அரும்செயலை செய்தான் என்று நாயனாரின் மனைவி மகிழ்ந்தாள்.

"...மருவு மகிழ்ச்சி எய்த அவர் மனைவியாரும் கணவனார்
அருமை உயிரை எனக்கு அளித்தான் என்று மிகவும் அகம்மலர
இருவர் மனமும் பேர்உவகை எய்திஅரிய வினை செய்தார்..." [16]

மேலும் புதல்வனின் உறுப்புக்களின் இறைச்சியாவற்றையும் கொத்தியும் அறுத்தும் திருத்தியும் எலும்பினுள் உள்ள தசைப்பகுதியை திறந்து எடுத்து கறியாக்குவதற்கு வேண்டிய பலவகையான காய்களை இட்டு திருவமுது சமைத்தனர். அடியாரின் வேண்டுகோலுக்கு இனங்கவே உணவு சமைக்கப்பட்டு பரிமாறப்பட்டது. அடியவரது திருப்பாதங்களை கழுவி அந்நீரினை தங்கள் தலையின் மேல் தெளித்து மேலும் அப்புனித நீர் கொண்டு இல்லத்தின் அனைத்து இடங்களையும் சுத்தம் செய்தனர். இச் செயலின் ஊடாக வீட்டிற்கு வரும் விருந்தினரை இறைவனுக்கு நிகராக போற்ற வேண்டும் எனும் உயரிய நிலை புலப்படுத்தப்படுகின்றது. இதனை,

" தூய நீரால் சிறுதொண்டர் சோதியார்தம் கழல்விளக்கி
ஆயபுனிதப் புனல் தங்கள் தலைமேல் ஆரத் தெளித்து இன்பம்
மேய இல்லம் எம்மருங்கும் வீசிவரை மென்மலர் சாத்தும்
ஏயும் தூபதீபங்கள் முதல் பூசனை செய்து இறைஞ்சுவார்..."[17]

இறைவனின் அம்சமாக வீட்டிற்க உணவருந்த வந்திருக்கின்ற அடியாரைப் போற்றி வணங்கி அவருக்கு உணவும் பரிமாறப்பட்டது. அத்துடன் சிவனடியார் தன்னுடன் இருந்து உணவு உண்ணுவதற்கு யாரேனும் வரவேண்டும் என கேட்கின்றார். இப்பொழுது தனித்து உண்ண எம்மால் இயலாது என்கிறார். அதற்கு நாயனார் தானும் அமர்ந்து உண்ணுவதற்கு அனுமதி கேட்க அவர் அதனை ஒப்புக்கொண்டார். மேலும் தன்னுடன் அமர்ந்து உணவு உண்ண புதல்வனை அழைக்குமாறு அடியார் கூறினார். அதற்கு நாயனார் புதல்வனால் வர முடியாது என உரைத்தார். அதனைக் கேட்டவர் தம்பதியினர் இருவரையும் புதல்வனை அழைக்குமாறு வற்புறுத்தினார். அப்போது இருவரும் அழைத்தனர். அழைப்புக்குரல் கேட்டதும் இறந்து போன புதல்வன் உயிர்பெற்று வந்தான். இது இறைவனின் திருவிளையாடல் என இருவரும் அறிந்து கொண்டனர். அத்தருணத்தில் அடியாராக வந்திருந்த இறைவன் தனது திரமேனினை அவர்களுக்கு வெளிப்படுத்தி அருள் செய்தார். இதனை,

"கொன்றை வேணியார் தாமும் பாகம் கொண்ட குலக்கொடியும்
வென்றி நெடுவேல் மைந்தரும் தம் விரைப் பூங்கமலச் சேவடிக்கீழ்
நின்ற தொண்டர் மனைவியார் நீடு மகனார் தாதியார்
என்றும் பிரியாதே இறைஞ்சி இருக்க உடன் கொண்டு ஏகினார்."[18]

மேல்வரும் பாடல் பறைசாற்றுகின்றது. அதாவது இறைவன் நாயனாரின் விருந்தோம்பல் பண்பினை உலகிற்கு வெளிக்காட்டவும் அவர்களது இறை பக்தியினை உணர்த்தவும் இத்தகைய திருவிளையாடலை மேற்கொண்டமை புலனாகின்றது.

## 4. முடிவுரை

நாயன்மார்களின் நோக்கம் விருந்தோம்பலாக இருந்தாலும் அதிலிருந்து நாம் உணர்ந்து கொள்ளக்கூடியது இல்லை என்பவருக்கு ஒரு வேளையாவது உணவு கொடுக்க வேண்டும் என்பதே ஆகும். தான், தன்வீடு, தன்குடும்பம் என்ற குறுகிய மனப்பான்மையுடன் வளர்த்து வரும் இந்த காலகட்டத்தில் விருந்தோம்பல் என்பதே இல்லாமல் அழிந்து விட்டது என்றே கூறலாம். விருந்தினர்களைக் கண்டபோது முகமலர்ந்த காலம் மாறி, முகம் வாடுகின்ற நிலை வேகமாய் உருவாகி வருகிறது. இந்த நிலைமை மாற பழமை வாய்ந்த இலக்கியங்கள் காட்டுகின்ற விருந்தோம்பலின் சிறப்பினை எடுத்துரைக்க வேண்டும். விருந்தோம்பலை தம் வாழ்வின் நோக்கமாகக் கொண்ட நாயன்மார்கள் பலரினைப் பற்றி பெரியபுராணத்தில் குறிப்பிடுகிறார் சேக்கிழார். தங்களிடம் இருந்த எல்லாச் செல்வங்களையும் விருந்தோம்பலுக்காகப் பயன்படுத்துகின்றனர். செல்வம் குறைந்து வறுமையுற்ற காலத்திலும் இல்லையே என்று கூறாது உயிரையும் பொருட்படுத்தாமல் விருந்தோம்பல் கொள்கையில் உறுதியாக இருந்தனர்.

**அடிக்குறிப்புக்கள்**

1. சுபராஜ், ந., ரதிதேவி, சே., (2019), இஸ்ஸாமியரின் ஸகாத் நடைமுறையும் இந்துக்களின் விருந்தோம்பல் கோட்பாடு,
2. சுபராஜ், ந., ரதிதேவி, சே., (2019), இஸ்ஸாமியரின் ஸகாத் நடைமுறையும் இந்துக்களின் விருந்தோம்பல் கோட்பாடு,
3. சுபராஜ், ந., ரதிதேவி, சே., (2019), இஸ்ஸாமியரின் ஸகாத் நடைமுறையும் இந்துக்களின் விருந்தோம்பல் கோட்பாடு,
4. கலித்தொகை 81
5. நடராசன், பி.ரா., (2006), பெரிய புராணம் : ப.242
6. மேலது, ப. 253
7. மேலது, ப. 258
8. மேலது, ப. 258
9. மேலது, ப. 259
10. மேலது, ப. 260
11. மேலது, ப. 261
12. மேலது, ப. 262
13. மேலது, ப. 262
14. மேலது, ப. 263
15. மேலது, ப. 264
16. மேலது, ப. 267
17. மேலது, ப. 271
18. மேலது, ப. 279

**உசாத்துணைகள்**

சிதம்பரனார், சா., (2004), பழந்தமிழர் வாழ்வும் வளர்ச்சியும், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

சுப்பிரமணிய முதலியார், ஊ.மு., (1958), சிறுத்தொண்டர் நாயனார் புராணம், கோவை தமிழ்ச் சங்கம், கோயமுத்தூர்.

சுப்பிரமணிய முதலியார், ஊ.மு., (2018), பெரிய புராணம் என்னும் திருத்தொண்டர் புராணம், பன்னிரு திருமுறை ஆய்வு மையம், கோவை.

ஞானசம்பந்தன், அ.ச., (1999), பெரிய புராணம் ஓர் ஆய்வு, கங்கா புத்தக நிலையம், தஞ்சை.

தங்கமாரி, சு., (2017.01.24), ஆய்வு : விருந்தோம்பல் பண்பும் தமிழரின் மாண்பும், விருதுநகர்.

நடராசன், பி.ரா., பெரிய புராணம், உமா பதிப்பாகம், சென்னை.

பன்னிரு திருமுறை ஆய்வு நூல் : பன்னிரு திருமுறைப்பண்பாட்டு ஆய்வு மாநாடு 2011, (2011), மாணிக்கவாசகர் பதிப்பகம், கோலாலம்பூர்.

வெள்ளைவாரணன், க., (1962), பன்னிரு திருமுறை வரலாறு, அண்ணாமலைப் பல்கலைகழகம், அண்ணாமலை.

ஜெனிபர், சு., (2016.11.16), ஆய்வு : அற இலக்கியங்களில் விருந்தோம்பல், பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி.